ஊநி4/6570/2011

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
தூத்துக்குடி மாவட்டம்,
தூத்துக்குடி 628 101.

நாள் : 20.01.2012.
திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 06.

# பத்திரிக்கை செய்திக் குறிப்பு

இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, புது தில்லி, மத்திய அரசு அரசிதழ் சிறப்பு வெளியீடு பகுதி II பிரிவு 3 உட்பிரிவு (ii) அறிவிக்கை S.O. 705 (E) நாள் 02.09.1999 இன் படியும் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, மத்திய அரசு அரசிதழ் சிறப்பு வெளியீடு அறிவிக்கை S.O. 249 (E) நாள் 04.02.2011 இன் படியும் மறு சுழற்சி செய்யத் தக்க பிளாஸ்டிக்ஸ் தயாரித்தல் மற்றும் உபயோகப்படுத்துதல் விதிகள் 1999 மற்றும் பிளாஸ்டிக் கழிவு (நிர்வாகம் மற்றும் பயன்படுத்துல் விதிகள்) 2011 உருவாக்கப்பட்டு பிளாஸ்டிக்ஸ் பொருட்களின் பயன்பாடு வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில், மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் பொருட்கள் குறித்து பொதுமக்களிடம் கடந்த மூன்று மாதங்களாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு பேரணிகள், சிறப்பு முகாம்கள், பல்வேறு தரப்பு பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் கூட்டங்கள் ஆகியன மாவட்ட நிர்வாகத்தால் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் பொருட்களைத் தடை செய்தல் குறித்து தூத்துக்குடி மாவட்டத்தின் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, தற்போது பின்வரும் கூடுதல் விவரங்கள் தூத்துக்குடி மாவட்ட பொது மக்கள் / தயாரிப்பாளர்கள் / விற்பனையாளர்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன.

- கேரி பைகள் மற்றும் சிறிய பைகள் உற்பத்தி, இருப்பில் வைத்தல், வினியோகம், விற்பனை மற்றும் பயன்படுத்தும் பொழுது பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

    - உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், குடிநீர் ஆகியவற்றுக்கான கேரி பைகள் வெள்ளை நிறத்திலோ அல்லது இந்திய தரக்கட்டுப்பாடு IS 9833:1981 இன்படியும் அவ்வப்போது அரசால் நிர்ணயிக்கப்படும் வரையறுக்கப்பட்ட நிறமிகளால் தயாரிக்கப்பட்ட நிறத்திலோ அமையப்பெற வேண்டும்.

- எந்த ஒரு நபரும் மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களால் ஆன கேரி பைகளை உணவுப் பொருட்களை சேகரிப்பதற்கோ, சுமப்பதற்கோ, வழங்குவதற்கோ அல்லது பொருட்களை கட்டுவதற்கோ உபயோகப்படுத்தக் கூடாது.
- எந்த ஒரு நபரும் 40 மைக்ரான் அளவுக்கு குறைவான தடிமன் அளவிலான புத்தம் புதிய கேரி பைககள், மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள், மட்கும் தன்மையுள்ள பிளாஸ்டிக் (Compostable Plastics) பொருட்களால் ஆன கேரி பைகளை தயாரிப்பதோ, இருப்பில் வைப்பதோ, வினியோகம் செய்வதோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது.
- குட்கா, புகையிலை மற்றும் பான்மசாலா ஆகியவற்றை பிளாஸ்டிக் பொருட்களால் ஆன சிறிய பைகளில் இருப்பில் வைக்கவோ, கட்டுமானம் செய்யவோ அல்லது விற்பனை செய்யவோ கூடாது.
- பிளாஸ்டிக் பொருட்களை மறுசுழற்சி செய்தலுக்கான வழிமுறையான இந்திய தரக்கட்டுப்பாடு IS 14534:1998 வழிமுறைகளின்படியும் அவ்வப்போது திருத்தப்படும் சட்டவிதிகளின்படியும் மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கேரி பைகள் முறையாக இருத்தல் வேண்டும்.
- மட்கும் தன்மையுள்ள பிளாஸ்டிக் (Compostable Plastics) பொருட்களுக்கான தெளிவான குறிப்புகளான இந்திய தரக்கட்டுப்பாடு IS/ISO 17088:2008 வழிமுறைகளின்படியும் அவ்வப்போது திருத்தப்படும் சட்டவிதிகளின்படியும் மட்கும் தன்மையுள்ள பிளாஸ்டிக் கேரி பைகள் முறையாக உருவாக்கப்பட வேண்டும்.

- பிளாஸ்டிக் பொருட்களால் ஆன ஒவ்வொரு கேரி பைகளிலும், பல அடுக்கு கட்டுகளிலும் (Multilayered Plastics) ஆங்கிலம் அல்லது உள்ளூர் மொழியில் பின்வரும் தகவல்கள் அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

  - தயாரிப்பாளரின் பெயர், பதிவு எண் விவரம் மற்றும் கேரி பைகளுக்கான தடிமன் விவரம்
  - பல அடுக்கு கட்டுகளில் (Multilayered Plastics) தயாரிப்பாளர் பெயர் மற்றும் பதிவு எண் விவரம்
  - மறு சுழற்சி செய்யத்தக்க பிளாஸ்டிக் பொருட்களுக்கான வழிமுறைகள் இந்திய தரக்கட்டுப்பாடு IS/ISO 14534:1998 வழிமுறைகளின்படியும் அவ்வப்போது திருத்தப்படும் சட்டவிதிகளின்படியும் கேரி பைகள் "மறுசுழற்சி செய்யப்பட்டது" என்பதற்கான முத்திரை அல்லது குறியீடு ஒவ்வொரு மறு சுழற்சி செய்யப்பட்ட கேரி பைகளிலும் அமையப் பெற வேண்டும்.
  - மட்கும் தன்மையுள்ள பிளாஸ்டிக் (Compostable Plastics) பொருட்களுக்கான தெளிவான குறிப்புகள் இந்திய தரக்கட்டுப்பாடு IS/ISO 17088:2008 வழிமுறைகளின்படியும் மட்கும் தன்மை கொண்ட பிளாஸ்டிக் பொருட்களால்

தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு கேரி பையிலும் "மட்கும் தன்மை கொண்டது" என்பதற்கான முத்திரை இடம் பெற்றிருக்க வேண்டும்.

- விற்பனையாளர்கள், தங்களால் விற்பனை செய்யப்படும் பிளாஸ்டிக் கேரி பைகள் மற்றும் பல அடுக்கு கட்டுப் பொருட்களில் (Multilayered Plastics) மேற்சொன்ன வழிமுறைகளின்படி குறியீடுகள் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- பிளாஸ்டிக் கேரி பைகள் மற்றும் பல அடுக்கு கட்டுப் பொருட்களைத் தயாரிக்கும் எந்த ஒரு நபரும் உரிய முறையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்து முறையான உரிமம் மற்றும் உரிமம் புதுப்பித்தல் பெற்றிருக்க வேண்டும்.
- பிளாஸ்டிக் பொருட்களை மறுசுழற்சி செய்யும் அல்லது செய்ய உத்தேசிக்கும் எந்த ஒரு நபரும் உரிய முறையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்து முறையான உரிமம் மற்றும் உரிமம் புதுப்பித்தல் பெற்றிருக்க வேண்டும்.
- உரிமம் பெறப்படாமல் எந்த ஒரு நபரும் கேரி பைகள் மற்றும் மறுசுழற்சி செய்யத்தக்க பிளாஸ்டிக் பொருட்கள் அல்லது பல அடுக்கு கட்டுப் பொருட்கள் (Multilayered Plastics) உற்பத்தி செய்தல் கூடாது.
- எந்த ஒரு கேரி பையும் நுகர்வோருக்கு விலையில்லாமல் விற்பனையாளர்களால் வழங்கப்படுதல் கூடாது.
- பிளாஸ்டிக் கேரி பைகள் மற்றும் பல அடுக்கு கட்டுப் பொருட்களைத் தயாரிக்கும் மற்றும் உற்பத்தி செய்யும் எந்த ஒரு நபரும் அப்பொருட்களின் கடைசி ஆயுட் காலம் வரை சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் மேற்படி பொருட்கள் அமையப்பெறுவதை உறுதி செய்ய வேண்டும். இப்பொறுப்பானது மேற்படி பொருட்களை, கட்டுவதற்கு உபயோகிக்கும் அனைத்து தயாரிப்பாளர்களுக்கும் பொருந்தும். (Extended Producer's Responsibility) மேற்படி தயாரிப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகள் இறுதி நிலையில் பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்குத் தேவையான நிதியினை ஈடு செய்ய வேண்டும்.

எனவே, தூத்துக்குடி மாவட்டத்தின் மக்களின் நன்மைக்காகவும், வருங்கால சந்ததியினரின் நலனுக்காகவும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் மாவட்ட நிர்வாகத்தின் இம்முயற்சிக்கு பொதுமக்கள் / வணிகர்கள் / தயாரிப்பாளர்கள் / பல்வேறு தரப்பட்ட விற்பனையாளர்கள் தங்களது ஒத்துழைப்பினை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**ஆஷிஷ் குமார், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தூத்துக்குடி மாவட்டம்.